# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2349/41 - 2023 සැප්තැම්බර් මස 16 වැනි සෙනසුරාදා - 2023.09.16

*2349/41 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***ச.வ.பி. 277/40(iv)***

***(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச் சட்டம்***

***19 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்***

*(188 ஆம் அத்தியாயமான)* புராதனப்பொருட்கள் கட்டளைச்சட்டத்தின் 19 ஆம் பிரிவினால் எனக்குறித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆகிய நான், சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக “பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள்” ஆக இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள புராதன நினைவுச்சின்னங்களை வெளிப்படுத்துகின்ற சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு உட்கருதி இத்தால் அறிவித்தலை வழங்குகின்றேன்.

மேற்சொல்லப்பட்ட கட்டளையை ஆக்குவதில் ஆட்சேபனைகள் எவையேனுமிருப்பின் 2023.10.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு ஆட்சேபனையும் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆட்சேபனை செய்யப்படுகின்றதான ஏதேனும் ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விதுர விக்ரமநாயக்க,
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2023, ஓகத்து 11.*


1A - G 40325 — 07 (2023/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களாக பிரகடனம் செய்யப்பட வேண்டிய நினைவுச் சின்னங்கள்**

1. தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் போப்பே போத்தலை பிரதேச செயலாளர் பிரிவில் வக்வெல்ல இல.121 கிராம அலுவலர் பிரிவிலுள்ள பட்டுவன்துடாவ ஶ்ரீ சுகதாராம விகாரை நிலமனையில் அமைந்துள்ள கண்டிய கால ஓவியங்களைக் கொண்ட சிலைவணக்க வீடு.

2. தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் திக்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவில் பதீகம கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள பதீகம தீகவாலுகாராமை இராஜ மகா விகாரை நிலமனையில் அமைந்துள்ள பொஹய எல்லை மற்றும் தம்ம போதனை மண்டபம்.

3. தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில் 408 சீ கம்புறுகமுவ தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள கொடகந்த கிராமத்தில் அமைந்துள்ள புராதன சமுத்திரதீர மகா விகாரை நிலமனையில் அமைந்துள்ள பழைய சிலைவணக்க வீடு, தாதுகோபுரம் மற்றும் தம்ம போதனை மண்டபம். (வடக்கு அகலாங்கு 5° 56' 20.5" வ மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 30' 14.4" கி).

4. தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் வெலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் போரம்ப கனங்கே வடக்கு, இல. 372 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கனங்கே இராஜ மகா விகாரை நிலமனையிலுள்ள பழைய சிலைவணக்க வீடு (வடக்கு அகலாங்கு 6°0242.4 வ மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 2451.4 கி).

5. தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை பிரதேச செயலாளர் பிரிவில் வகேகொட கிராம அலுவலர் பிரிவிற்குரிய வகேகொட ரன்கொத்மலு விகாரை பூமியிலுள்ள,

   (i) தூண்களின் மீதுள்ள பழமையான விகாரை இடிபாடுள்ள கட்டிடம் மற்றும் அவ்விடத்திலிருந்து வடக்கு திசைக்கு 2 மீட்டர் மற்றும் 50 செ.மீட்டரும் கிழக்கு, தெற்கு மற்றும் மேற்குத் திசைகளில் 3 மீட்டரையும் கொண்ட நிலமனை. (வடக்கு அகலாங்கு 6˚3'24.3" வ மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80˚ 40'57.6"கி)

   (ii) பழைய தூபி மற்றும் மதில் சுவரிலிருந்து வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு திசைகளுக்கு 5 மீட்டர் மற்றும் மேற்குத் திசையில் சுவரின் மதில் உள்ளடங்கும் நிலமனை (வடக்கு அகலாங்கு 6˚3' 24"வ மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80˚ 40' 59" கி).

6. சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில் துனுகம - மாலியத்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள மாலியத்த ஶ்ரீ சுதர்ஷனாராம விகாரை பூமியிலுள்ள டெம்பிட்ட விகாரை. (வடக்கு அகலாங்கு 7°16' 28" வ மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 27' 55" கி).

7. சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் அரணாயக்க பிரதேச செயலாளர் பிரிவில் இல. 48 ஏ கெஹெல்வத்தை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கெஹெல்வத்தை ஶ்ரீ ஜயவர்தன புர பிரிவெனா விகாரை நிலமனையிலுள்ள சிலைவணக்கவீடு, தம்ம போதனை மண்டபம்,பொஹயவீடாகப் பயன்படுத்தப்படும் இரண்டு மாடிக் கட்டிடம் மற்றும் சொல்லப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்திலிருந்து நான்கு திசைகளிலுமுள்ள 2 மீட்டர் அளவிலான நிலமனை. (வடக்கு அகலாங்கு 7°10' 28" வ மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 22' 52" கி).

8. சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் கேகாலை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வத்துர இல. 54 ஏ கிராம அலுவலர் பிரிவிலுள்ள வத்துர இராஜ மகா விகாரை நிலமனையிலுள்ள போதிச் சுவர் மற்றும் சொல்லப்பட்ட இடத்திலிருந்து நான்கு திசைகளிலுள்ள 2 மீட்டர் அளவிலான பூமிப் பிரதேசம். (வடக்கு அகலாங்கு 7°11' 20" வ மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 22' 32" கி).

9. சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் கேகாலை பிரதேச செயலாளர் பிரிவில் பரணகம்பளை இல.52 - சீ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ரங்வல புராதன விகாரை பூமியிலுள்ள பழைய சிலைவீடு. (வடக்கு அகலாங்கு 7°15' 08" வ மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 19' 24" கி).

10. மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கொட்டாஞ்சேனை கிழக்கு இல. 42 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கொட்டாஞ்சேனை ஸ்ரீ பரமானந்த புராதன மகா விகாரை பூமியிலுள்ள பழைய தம்ம போதனை மண்டபம், நூலகக் கட்டிடம், மணிக் கோபுரம், தூபி, சிலைவணக்க வீட்டின் மத்திய பகுதி மற்றும் அத்தகைய ஒவ்வொரு கட்டிடத்தையும் சூழவுள்ள 10 அடி அகலமான நிலமனை. (வடக்கு அகலாங்கு 6°95' 2" வ மற்றும் கிழக்கு நெட்டாங்கு 79° 86' 6" கி).

11. வடமேல் மாகாணத்தின் குருணாகல் மாவட்டத்தில் நாரம்மலை பிரதேச செயலாளர் பிரிவில் இல 1042 தம்பதெனிய தெற்கு கிராம அலுவலர் பிரிவிற்குச் சொந்தமான கலபொட கிராமத்தில் மாதன்கஹமுலவத்தை என அறியப்படும் காணியிலுள்ள பின்வரும் பூகோளத் தரவு ஒருங்கிணைப்புகளின் வேறாக்கப்பட்ட இடப் பிரதேசத்துடனான தம்பதெனிய இராசதானியின் பழைய கோட்டையின் முற்றம்.

| வடக்கு அகலாங்கு | கிழக்கு நெட்டாங்கு |
|---|---|
| 7° 21' 36.60" வ | 80° 9' 24.42" கி |
| 7° 21' 35.90" வ | 80° 9' 28.37" கி |
| 7° 21' 37.26" வ | 80° 9' 33.34" கி |
| 7° 21' 37.01" வ | 80° 9' 33.46" கி |
| 7° 21' 35.59" வ | 80° 9' 28.35" கி |
| 7° 21' 36.12" வ | 80° 9' 24.43" கி |

EOG 09-0121

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.